புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# குடியாத்தம் மோடிகுப்பத்தில் புதிய கற்காலத் தடயங்கள்

ச. மணிமேகலை,
உதவிப் பேராசிரியர்,
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர் – 635601, திருப்பத்தூர் மாவட்டம்.

தமிழகத்தில் மனித இனம் தோன்றியதற்கான சான்றுகள் சுமார் 2,50,000 ஆண்டுகளிலிருந்து கிடைக்கின்றன. அதற்கு முன்னர் மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கிடைக்கவில்லை. டார்வினின் மனித இனம் கோட்பாடு என்பது குரங்கிலிருந்து மனிதன் உருவானான் என்று அறிவியலை அடிப்படையாகக் கொண்டு திகழ்கின்றது. ஆனால் பழங்காலத்தில் முதன் முதலில் வாழ்ந்த மனிதர்கள் மிருகங்களுடன் மிருகங்களாக வாழ்ந்தனர் என்பதையும் அதன் பின்னர் வேட்டையாடுவதற்குக் கற்கருவிகளைப் பயன்படுத்தினர் என்றும் தொல்லியல் சான்றுகள் கூறுகின்றன.

காலச்சூழலின் மாற்றத்தினால் மக்களிடையே இனவிருத்தி அதிகமாக பெருகியதால் வேட்டையாடிப் பெறும் உணவு மட்டும் போதுமானதாக இல்லை. எனவே வேட்டையாடும் தொழிலுடன் கால்நடைகளை வளர்க்கின்ற நிலைக்கு வந்தனர். வேட்டையின் போது கிடைக்கின்ற குட்டிகளை வீடுகளில் வளர்க்க முற்பட்டனர். இதனால் கால்நடைகளிலிருந்து கிடைத்த உணவு பொருட்களும் பெருகியது. இதனால் கால்நடை வளர்ப்பு சமுதாயம் உருவானது. இரண்டாவதாக கிழங்குகள், கனிகள், தானியங்கள் போன்றன நீர்நிலைகளுக்குச் சென்று கொண்டு வருவதை விடுத்து அந்த தானியங்களையும், கனிகளையும் தங்களுடைய குடிசையின் அருகிலுள்ள நீர்நிலைகளுக்கு அருகிலேயே பயிர் செய்தனர்.

கால்நடை வளர்ப்பு, பயிர்த்தொழில் போன்ற தொழில்கள் வலுவானதாக வளர்ந்ததால் மக்கள் நிலையான சமுதாயமாகவும், கிராமங்களில் வீடுகளைக் கட்டிக் கொண்டும் வாழ்ந்தனர். புதிய தொழில் நுட்பங்களை உருவாக்கியதால் இக்காலம் ‘புதிய கற்காலம்’ எனப் பெயர் பெற்றது.

வேலூர் மாவட்டத்தின் குடியாத்தம் என்ற நகராட்சிக்கு உட்பட்ட மோடிகுப்பம் என்னும் சிற்றூரில் புதிய கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் உள்ளன.

## மோடிகுப்பம் வரலாறு

மோடிகுப்பம் என்பது தமிழ்நாடு மாநிலத்தில் அமைத்துள்ள வேலூர் மாவட்டத்தில் உள்ள குடியாத்தம் தொகுதியில் உள்ள ஒரு கிராமம் ஆகும். இது மாவட்டத் தலைமையகமான வேலூரில் இருந்து மேற்கு நோக்கி 39 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. குடியாத்ததிலிருந்து 10 கி.மீ தொலைவிலும் உள்ள சிற்றூராகும்.

மோடிகுப்பம் அருகே தட்டப்பறை, சின்னப்பள்ளி, முக்குன்றம், தட்டிமணப்பள்ளி, ராமலை போன்ற கிராமங்கள் உள்ளன. இவ்வூரில் மலையை ஒட்டிய பள்ளத்தாக்கு பகுதியில் புதிய கற்காலத் தடயங்கள் அதிகளவில் கிடைக்கப் பெற்றுள்ளன.

## மோடிகுப்பத்தில் புதிய கற்கால மட்பண்டங்கள்

புதிய கற்காலம் மக்கள் கற்களைக் கொண்ட தரையும் சுற்றுச் சுவரும் எழுப்பியுள்ளனர் காட்டில் மற்றும் மலைப்பகுதியில் கிடைத்த புல்லைக கொண்டும், மூங்கிலைக் கொண்டும்

கூரைகள் போட்டுள்ளனர். கூம்பு வடிவத்தில் இக்கூரைகள் இருந்திருக்கலாம் என்று அனுமானிக்க முடிகிறது.



மட்பாண்டங்கள்

புதிய கற்காலத்தில் தான் முதன் முதலில் மட்கலங்களை உருவாக்கக் கற்றுக் கொண்டுனர். இக்காலத்தில் முதலில் செய்யப்பட்டவை கையால் செய்யப்பட்வை. பின்னர் மெதுவாக சுற்றுகின்ற சக்கரத்தைக் கொண்டு மட்கலங்களைச் செய்துள்ளனர். இதனால் முக்கால மட்கலங்களின் ஓடுகள் தடித்தும், சொரசொரப்பாகவும் காணப்படுகின்றன. கால்நடைகளின் எலும்புகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சாம்பல் நிற வழுவழுப்பான மண்பாண்டங்கள், சிவப்பு – கருப்பு, கருப்பு – சிவப்பு மட்பாண்டங்கள் பானைகளில் கிறீல்களுடன் கூடிய மட்பாண்டங்கள் மற்றும் சாம்பல் மேடுகள் அதிகளவில் கிடைக்கப் பெற்றுள்ளன.

மோடிகுப்பத்தில் புதிய கற்கால மக்களின் குடியிருப்புகள்

புதிய கற்கால மக்கள் தமக்கெனக் குடியிருப்புப் பகுதிகளை ஏற்படுத்திக் கொண்டு நிலையாக ஓரிடத்தில் வாழ்தலைப்பட்டனர். இவர்கள் நீள் செவ்வக வடிவான புல்வேய்ந்த கூரை வீடுகளில் வாழ்ந்தனர் என்பதை மோடிகுப்பம் அகழாய்வு தெளிவாகக் காட்டுகின்றன.

இங்கு நடத்தப்பட்ட அகழாய்வில் மாடு, ஆடு, புள்ளிமான், கோழி, பன்றி, முள்ளம்பன்றி, காட்டுபூனை ஆகியவற்றின் எலும்புகள் கிடைத்தன. இதன் மூலம் இவர்கள் மேற்கூறிய விலங்குகளை வளர்த்தனர் என்னும் அவற்றின் இறைச்சியை சமைத்து உண்டனர் என்பதற்கு சான்றாக சாம்பல் மேடுகளும் உள்ளன.

புதியகற்காலத்தைச் சேர்ந்த மக்கள் நாகரிகத்தில் முன்னேற்றமடைந்திருந்தனர். மலைசார்ந்த இடங்கள், பள்ளத்தாக்குகள், ஆற்றங்கரைகளிலும், மரங்கள், காடுகள் நிறைந்த பகுதிகளிலும் தமது வாழ்விடங்களை அமைத்துக் கொண்டனர்.

தமது வாழ்விடங்களை மண், கல், சாணம் பயன்படுத்தியும், மேற்கூரையை புல்லைக் கொண்டும், சோளத்தட்டை, வைக்கோல் கொண்டும் அமைத்தனர்.

மோடிகுப்பம் பகுதியில் புதிய கற்கால மனிதர்களின் வாழ்வியல் முறைகள்

பழங்கால மனிதன் பயன்படுத்திய அரவைக் கல் ஒன்றும் இப்பகுதியில் உள்ளது.
பழங்கால மனிதன் வேட்டையாடிய விலங்குகளை நெருப்பில் இட்டு வேகவைத்து உண்டதற்கான சாம்பல் மேடுகள் உள்ளன. மேலும் சாப்பிட்டு போட்டதற்கான அடையாளமாக காட்டுப்பன்றிகளின் எலும்புகள் எச்சமாக உள்ளன. பானை ஓடுகள், சாப்பிட்ட விலங்குகளின்

எலும்புகள், மேலிருந்து 3 மீ ஆழத்திற்கு குழிகளைத் தோண்டியும், 5 மீ அளவில் அகலத்திலும் வீடுகளை அமைத்து வாழ்த்து உள்ளான். அந்த வீடுகளை மண் சுவர்களால் கட்டியுள்ளான் என்றும், தரைத்தளம் அமைத்து வீடுகளை அமைத்து இருந்திருக்கலாம்.



தரைத்தளம்

அத்தரைத்தளத்தை நல்ல களிமண், சாம்பல், சாணம் கொண்டு அமைத்துள்ளான். மண்சுவர்களின் மேல் மரக்குச்சிகளை இடுக்கி வைத்து அதன்மீது இலைகளைக் கொண்டு கூரையை அமைத்திருக்கலாம் உணவுகளை வேகவைப்பதற்கு சாம்பல், சாணங்களைக் கொண்டு எரிக்க வைத்து உணவுகளை உண்டிருக்கலாம்.

இந்த மாதிரியான ஆய்வுகள் திருப்பத்தூர், அரூர், கிருட்ஷணகிரி போன்ற ஊர்களில் காணக்கிடைக்கின்றன. இவ்வாய்வுகளின் மூலம் புதிய கற்கால மனிதர்கள் பெருமளவில் வாழ்ந்தார்கள் என்பதற்கான சான்றுகள் தெளிவாகிறது.



சாம்பல் மேடுகள்

*புதிய கற்கால மக்கள் பயன்படுத்திய கருவிகள்*

*பானைகள் மற்றும் கற்கருவிகள்*

*இப்பகுதி மலையை ஒட்டிய பள்ளத்தாக்கு பகுதியாகும். இங்கு மேற்கொண்ட மேற்பரப்பாய்வில் சிறிய அளவிலான பானை ஓடுகளும், வழவழப்பான கைக்கோடரி ஒன்றும் கிடைத்துள்ளது.*

*பானைகளில் அழகிய வேலைப்பாடுகள் உள்ளன. அரைக்கும் கல் (Grinding stone) வகைகளும் கிடைக்கப்பெற்று உள்ளன.*



வேலைப்பாடுகள் உடைய பானை ஓடுகள்



கருப்பு சிவப்பு பானை ஓடுகள்

பழைய கற்காலத்தில் பயன்படுத்தப்பட்ட கற்கருவிகளை நன்கு பதப்படுத்தப்பட்ட நூற்றுக்கணக்காண புதிய கற்கருவிகள் இக்காலத்தில் பயன்படுத்தப்பட்டன.

வழுவழுப்பான கற்களைக் கொண்டு பலவகை கருவிகள் செய்யப்பபடடன. தானியங்களை உடைக்கும் இயந்திரங்கள், மாவு அரைக்கும் இயந்திரங்கள், பலவகை கல் பாத்திரங்கள் முதலியன கிடைத்துள்ளன.



புதிய கற்கால மக்கள் பயன்படுத்திய அரவைக்கல்

முடிவுரை

வேலூர் மாவட்டத்தின் குடியாத்தம் பகுதியில் மோடிகுப்பம் கிராமத்தை தொடர்ந்து ஆராய்ச்சிக்கு உட்படுத்துவதன் பொருட்டு பல தொல்லியல் சான்றுகள் கிடைக்கும். இச்சான்றுகளைக் கொண்டு புதிய கற்கால மனிதர்களின் நாகரிக வளர்ச்சியையும், வாழ்வியலையும் அறிய வாய்ப்பாக இருக்கின்றது என்பதை இக்கட்டுரையில் வாயிலாக அறிய முடிகிறது.

துணை நின்ற நூல்கள்

1. மோகன்காந்தி, க., (தொ)., திருப்பத்தூர் மாவட்ட ஆவணக் களஞ்சியம், பரிதி பதிப்பகம், முதற்பதிப்பு – 2022
2. தகவலாளர் – முனைவர் வெங்கடேசன், மேனாள் தொல்லியல் இயக்குநர், சென்னை.

********* ********* ********** ********* ********* ********** ********** **********